மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.120/2021

வாக்குமூலம்: வா.சா.1 பவித்ரா

18.06.2024: சாட்சி ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:– உங்களுக்கு எத்தனை குழந்தைகள் அவர்கள் எங்கு படிக்கிறார்கள் என்றால் இரண்டு குழந்தைகள். அவர்களில் மகன் 2ம் வகுப்பு பள்ளபாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் படித்து வருகிறார். நீங்கள் இந்த வழக்கில் சொல்லியுள்ள சொத்தில் உங்கள் தாயார் குடியிருந்து வந்தார் என்பதை காட்டும் வகையில் வீட்டுவரி ரசீது, குடிநீர் கட்டண ரசீது ஆகியவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உங்கள் தாயார் பெயரில் மின் இணைப்பு இருந்தை காட்டக்கூடிய ஆவணங்களோ, மின் கட்டண ரசீதுகளோ இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்குச்சொத்தில் தற்போது மின் இணைப்பு எண்.290001841 என்பது 2ம் பிரதிவாதி தங்கமணி பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் அவர் மின் இணைப்பு வாங்க நான் ஆட்சேபணை செய்துள்ளேன். மேலும் வீட்டுவரி 2ம் பிரதிவாதி தங்கமணி பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கும் நான் ஆட்சேபணை செய்துள்ளேன். உங்கள் தாயாருக்கு வழக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை காட்டும் வகையில் கிரையம், பட்டா உள்ளிட்ட ஆவண்கள் எதுவும் உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது அம்மா பெயரில் பட்டா நகல் மட்டும் தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. நீங்கள் உங்களுடைய குடும்ப அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்தின் சந்தை மதிப்பு தெரியுமா என்றால் விற்றால் ரூ.1–1/2 லட்சம் வரை போகலாம். வழக்குச் சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. தகர வீடுதான் உள்ளது. வழக்குச்சொத்தில் தற்பொழுது யார் உள்ளார்கள் என்றால் வழக்குச்சொத்தை எனது அம்மா, அப்பா 2ம் பிரதிவாதிக்கு விற்றுவிட்டதாக சொல்லி என்னை சொத்திலிருந்து வெளியேற்றிவிட்டு அவர் இருந்து வருகிறார். சின்னகலையம்புத்தூர், தொட்டியன் தோட்டம், கதவு எண்.1/240 என்ற வீடு ஒன்று என் அம்மாவுக்கு இருந்தது என்றால் அது என் தாத்தா வீடு. எனது அம்மாவிற்கு கிடையத்தது. அதை மாரிமுத்து என்பவருக்கு வாடகைக்கு விட்டுள்ளீர் என்றால் சரியல்ல. உங்கள் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொன்னவாறு ஒருபோதும் வழக்கு சொத்தில் குடியிருக்கவில்லை என்றும், பொய்யாக வழக்குச் சொத்தில் இருப்பதாக

கூறியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தின் கதவு எண்.2/241Y என உள்ளது, அதில் 3ம் பிரதிவாதி அவருடைய மனைவி குழந்தைகளுடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். தாவாச்சொத்து உங்கள் அனுபவத்தில் உள்ளதாக பொய்யாக சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர் என்றால் சரியல்ல. அனுபவத்தில் இல்லாத உரிமையில்லாத சொத்திற்காக பிரதிவாதிகளை துன்புறுத்தும் நோக்கில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளீர் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை.

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

R KARTHIKEYAN
Digitally signed by R KARTHIKEYAN
Date: 2024.06.18 18:09:14 +0530

District Munsif,
Palani.